# விருட்சம்

புதிய தொகுதி

# Virutcham

New Volume



வணிக மாணவர் மன்றம்
யாழ் பல்கலைக்கழகம்

# விருட்சம்

## புதிய தொகுதி

## இதழ் 3

## 1998

(கல்வியாண்டு 1995/96)

COMMERCE STUDENTS' UNION
UNIVERSITY OF JAFFNA

இணை இதழாசிரியர்கள்

செல்வன் சி. ரங்காதரன்

செல்வி.த.உமா

**வணிக மாணவர் மன்றம்**

**யாழ் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**இலங்கை**

# சுதந்திரத்தின் பின் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய ஓர் பகுப்பாய்வு

# (An Analysis of Sri Lankan Economic Policy After Indipendence)

## அறிமுகம்

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த ஒரு சில ஆண்டுகளில் பல மூன்றாம் உலக நாடுகள் காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டு அரசியற் சுதந்திரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த, தென் ஆசிய நாடுகளில் ஒன்றான இலங்கைப்பொருளாதாரமும் கி.பி. 1505இல் இருந்து சுமார் 443 வருடங்கள் முறையே போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) மற்றும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்து 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆந் திகதி சுதந்திரம் பெற்றதோடு சுதேச ஆட்சியாளர்களின் நேரடி ஆட்சி ஏற்படத்தொடங்கியது. ஆகவே இலங்கைப் பொருளாதாரமானது சுதந்திரம் பெற்ற காலத்தில் எத்தகைய பொருளாதாரப் பண்புகளைக் கொண்டிருந்தது, சுதந்திரத்தைத் தொடர்ந்துவந்த காலப்பகுதியில் காலத்திற்குக்காலம் ஆட்சிக்கு வந்து கொண்டிருக்கின்ற வேறுபட்ட கட்சிகளைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் எத்தகைய பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார்கள், கடைப்பிடித்து வருகின்றார்கள் என்பது பற்றிய மிகவும் சுருக்கமான ஆய்வாக இக்கட்டுரையின் முற்பகுதி அமைந்துள்ள அதே நேரம் இறுதிப் பகுதியில் மேற்படி கொள்கை மாற்றங்களால் பொருளாதாரக் கட்டமைப்பானது எத்தகைய மாற்றத்திற்குட்பட்டு வந்துள்ளது என்பதனை முக்கியமான சில புள்ளி விபரங்களின் உதவியுடனான ஒரு மேலோட்டமான பார்வையாக இக்கட்டுரையின் இறுதிப்பகுதி அமைந்துள்ளது.

வரலாற்று அடிப்படையில் நோக்குகின்ற போது இலங்கையில் கி.பி. 1505 வரை சுதேச மன்னராட்சியே காணப்பட்டது. பின்னர் கி.பி. 1505 இல் இருந்து 1948 வரை அன்னியரின் ஆதிக்கத்தின் கீழ் இலங்கைப் பொருளாதாரம் காணப்பட்டது. இந்த வகையில் 1505 தொடக்கம் 1658 வரை போர்த்துக்கீசர் ஆட்சியும்,


**S. உதய குமார்**

**தற்காலிக விரிவுரையாளர்**

**பொருளியல் துறை,**

**யாழ். பல்கலைக்கழகம்.**


1658 தொடக்கம் 1796 வரை ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) ஆட்சியும், 1796 தொடக்கம் 1948 வரை ஆங்கிலேயரின் ஆட்சியும் காணப்பட்டு சுமார் 443 வருடங்கள்காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கைப் பொருளாதாரம் காணப்பட்டு 1948 பெப்ரவரி 04. ஆந் திகதி சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. சுதந்திரம் பெற்ற காலந்தொடக்கம் காலத்துக்குக் காலம் நடைபெற்று வரும் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டு பிரதான அரசியற் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் (United National Party) தோழமைக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்த வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் (Srilanka Freedom Party) மாறி மாறி ஆட்சியில் இருந்து வருகின்ற அதே நேரம் தத்தமது ஆட்சிக் காலத்தில் பல்வேறு பொருளாதாரக் கொள்கை மாற்றங்களை முன்வைத்து செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே இலங்கைப் பொருளாதாரமானது பல பாரிய மாற்றங்களுக்குட்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். குறிப்பாக 1815 இல் கண்டி இராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து 1830களில் பெருந் தோட்டப் பயிர்களில் ஒன்றான கோப்பிப் பயிர் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதுவரை காலமும் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்த கிராமிய விவசாயமானது தனது அந்தஸ்தினைப் படிப்படியாக இழக்கத்தொடங்கியது. இதன் விளைவால் ஒருபுறம் விருத்தியடைந்த நவீன முதலாளித்துவத்துறையாக பெருந் தோட்டத்துறை வளர்ந்துவர மறுபுறம் கவனிப்பாரற்ற பின்தங்கிய துறையாகக் கிராமிய விவசாயத்துறை காணப்பட்டது. இத்தகைய ஒரு இரட்டைப் பொருளாதாரப் பண்பு இலங்கையின் பொருளாதார வரலாற்றில் 1830 களில் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற காலப்பகுதிவரை மிகத் தெளிவான இலட்சணங்களுடன் காணப்பட்டமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

இங்கே இரட்டைப் பொருளாதார அமைப்பு என்ற பதமானது குறிப்பிட்ட பொருளாதாரத்திற்குள்ளேயே சுயாதீனமாக ஒரே நேரத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற அதே நேரம் தமக்கிடையே இடைத்தொடர்புகள் அல்லது இடை உறவுகள் (முன்கொழு, பின் கொழுத

தொடர்புகள்) அற்ற அல்லது மிகக் குறைந்த நிலையில் உள்ள துறைகள் செயற்படுவதைக் குறிக்கும். அதாவது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்களின் உற்பத்தியினை ஆதாரமாகக்கொண்ட வளர்ச்சி கண்ட நவீன துறையான பெருந்தோட்டத்துறை ஒரு புறம் சுயாதீனமாக இயங்கிய அதே நேரம் மறுபுறம் நெல் மற்றும் உப உணவுப் பயிர்களின் உற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட, வளர்ச்சி குன்றிய , பின் தங்கிய, மரபு ரீதியான பாரம்பரிய உற்பத்தி முறைகளைக் கொண்ட வாழ்வாதார (சீவனோபாய)ப் பயிர்ச் செய்கையை மேற்கொள்கின்ற கிராமிய விவசாயத் துறையும் சுயாதீனமாக இயங்கியமை இரட்டைப் பொருளாதார அமைப்பிற்குரிய பண்பினைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இவ்வகையில் பெருந்தோட்டத்துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்கு போன்றவற்றிற்கான ஊழியம், முதல், முயற்சி என்பன வெளிநாட்டிலிருந்து பெறப்பட்டதாகவே காணப்பட்டது. அத்துடன், வேலைக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கல், நவீன தொழில்நுட்பம், அதிக மூலதனம், பணப்புழக்கம், ஏற்றுமதிக்கான, வர்த்தக நோக்குடனான, உலக சந்தையை நம்பியதான உற்பத்தி, தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதிசெய்தல் மூலம் பெறுதல், உயர்ந்த நிலையில் வளர்ச்சி கூடிய ஊழிய வினைத்திறன் போன்ற பண்புகளையும் கொண்டிருக்க பாரம்பரிய அல்லது குடியான் விவசாயத்துறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களான நெல், உப உணவுப் பயிர்கள் போன்றவற்றிற்கான ஊழியம், முதல், முயற்சி என்பன உள்நாட்டிலேயே பெறப்பட்டதுடன் குடும்ப ஊழியம், பின்தங்கிய பாரம்பரிய தொழில்நுட்ப உதவியுடனான உற்பத்தி முறை, குறைந்த மூலதன அமைப்பு, குறைவான பணப்புழக்கம், சுயதேவையை முக்கிய நோக்காகவும், உள்ளூர் சந்தையை நம்பியதான உற்பத்தி, குறைவான வளர்ச்சி, குறைவான ஊழிய வினைத்திறன், தமக்குத்தேவையான அத்தியாவசியமான பொருட்களை தாமே பெறுகின்றமை, போன்ற பண்புகளைக் கொண்டதாகவும் காணப்பட்டது.

மேற்படி இரு துறைகளுக்கும் இடையில் இடைத்தொடர்புகள் குறைவாக இருந்தமை, ஊழிய வினைத்திறன் வேறுபாட்டமை, வர்த்தகத்தில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை, அன்னிய தொழிலாளர் வருகை, பெருந்தோட்ட விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவு போன்ற பல்வேறு நடவடிக்கைகளும் இணைந்து, முழுப் பொருளாதாரத்திலுமே வளர்ச்சி குன்றிய நிலையை ஏற்படுத்தவும், துறைகளுக்கிடையே சமமற்ற வளர்ச்சியையும், அதன் விளைவான வளர்ச்சியின்மையால் தொடர்ந்தேர்ச்சியாக பொருளாதார அபிவிருத்தி பின்நிற்கவும் ஏதுவாக அமைந்தது. எனினும் இத்தகைய இரட்டைப்பொருளாதாரத் தன்மையானதுஇலங்கை சுதந்திரம் பெற்றபின் நலிவடையத்தொடங்கியது. இதற்குரிய காரணமாக சுதந்திரத்தின் பின் சுதேச ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்தமையும், ஏற்கனவே கவனிப்பாரற்று இருந்த கிராமிய விவசாய சமுதாயத்தின் பக்கம் அவர்கள் கவனம் கூடுதலாகத் திரும்பியமையும், தேர்தலில் வெற்றிபெற அதனை நவீன மயப்படுத்தும் நோக்கில் பன்முகப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டமையையும் காரணமாகக் குறிப்பிடலாம்.

சுயதேவை உற்பத்தியை மேற்கொண்டு வந்த இலங்கை அந்நியர் வருகையின் பின், பொருளாதார நடவடிக்கைகளை ஏற்றுமதியை மையமாகக் கொண்டு செயற்படுத்தியமையால் தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற முதன்மை உற்பத்திகள் உள்நாட்டு உற்பத்தியில் மட்டுமன்றி ஏற்றுமதியிலும் முக்கிய பங்கினை வகித்தது. இந்த வகையில் மேற்படி முதன்மை ஏற்றுமதிப் பொருட்கள் உற்பத்தியில் நாடு பெருமளவு தங்கியிருந்த காரணத்தால், ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக காணப்பட்டது. உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதிகள், தேசியவருமானம், அதிக வருமானம், மூலதன ஆக்கம் போன்றன அதிகளவில் முதன்மை ஏற்றுமதியிலேயே தங்கியிருந்ததுடன் இதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தைப் பயன்படுத்தி தேவையான உணவுப்பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்கின்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகையில் 1950 களில் கூட தேயிலை, இறப்பர், தெங்கு என்பன உள்நாட்டு உற்பத்திக்கு (Gross Domestric Product (G.D.P) யில் ஏற்றுமதியில் 90% க்கு அண்ணளவான பங்கினை வகிக்க இறக்குமதியில் நுகர்வுப்பொருட்கள் குறிப்பிடக்கூடிய பங்கு வகித்ததும் கவனிக்கத்தக்கது.

மேற்படி விவசாயப்பொருட்கள், மற்றும் கனிப் பொருட்கள் போன்ற முதனிலைப் பொருட்களின் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் பொருளாதாரம் கூடியளவு நம்பியிருந்ததால் முதனிலைப் பொருளாக்கப் பொருளாதாரம் என்ற அந்தஸ்தினையும் இலங்கை பெற்றிருந்தது. இதற்குரிய அடிப்படைக் காரணங்களாக முதனிலைப் பொருட்களின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றமையும், கைத்தொழில் துறையின் வளர்ச்சியை மிகக் குறைந்தமட்டத்தில் கொண்டிருந்தமையும், ஏற்றுமதிப் பொருட்களிற்கான சந்தை தளம்பலுடையதாக இருந்தமையும், ஏற்றுமதிச் சந்தைமீது குறைந்த

கட்டுப்பாடு அல்லது அதனையும் செலுத்த முடியாத நிலைமையினைக் கொண்டிருந்தமையும் காரணமாகும். இந்நிலைமை உள்நாட்டு உற்பத்தி, மொத்த ஏற்றுமதி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் கட்டமைப்பினை இனங்காணுவதனூடாக அறிய முடிகின்றது.

இவ்வாறான நிலைமையைக் கொண்ட இலங்கைப் பொருளாதாரமானது தனக்குத்தேவையான அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்கின்ற செயற்பாட்டில் கூட மிகக் குறைந்த மட்டத்திலேயே செயற்படுவதனால் குறைவிருத்திப்பொருளாதாரம் என்ற வகையினுள் வருகின்றது. இதற்கான காரணங்களாக குறைவான தலாவருமானம். உதாரணமாக 1948இல் 113 US$ ஆகவும், 1996இல் 760 US$ ஆகவும், 1997இல் 814 US$ ஆக உள்ள அதே நேரம் குறைந்த கைத்தொழில் மயமாக்கம், குறைந்த கல்வித்தரம், குறைவான தொழில்நுட்ப முன்னேற்றம் சரியான திட்டமிடலின்மை, குறைந்த உற்பத்தித்திறன், உயர்வான வேலையின்மை நிலை, அதிகரித்த சனத்தொகை வளர்ச்சி, சமமற்ற வருமானப் பங்கீடு, வளங்களின் உச்சப்பயன்பாடின்மை, வாழ்க்கைத்தர அமைப்பு. மெய்வருமான நிலைமை, உறுதியற்ற காலநிலை, தளம்பலுறும் விவசாய உற்பத்தி, ஏற்றுமதித் தளம்பல், அதிகரித்துச் செல்லும் இறக்குமதியால் விரிவடைந்து செல்லும் சென்மதி நிலுவைப் பிரச்சினை (உதாரணமாக 1973இல் 13206 மில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானம் 14663 மில்லியன் ரூபா இறக்குமதிச் செலவு) பொருத்தமற்ற கல்வி முறை, அதிகரித்த சமூகநலச் செலவு, உண்மையான உற்பத்தியாற்றலைப் பெறமுடியாமை போன்றன பங்கெடுத்தன. இதனை விளங்கிக்கொள்ள தலாவருமானம், பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டி (PQLI) மானிட அபிவிருத்திச் சுட்டி (HDI) மானிடவறுமைச்சுட்டி (HPI) போன்ற அபிவிருத்தியை மதிப்பிடும் அளவீடுகள் முக்கியம் பெறுகின்றன.

இவ்வகையாக இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் காணப்பட்ட பொருளாதாரப் பண்புகளாக இரட்டை பொருளாதாரநிலை அதாவது ஏற்றுமதி சார்பான பெருந்தோட்டத்துறை வளர்ச்சி பெற்றமையும் நெல் உபஉணவு உற்பத்தி தொடர்பான கிராமியத்துறை புறக்கணிக்கப்பட்டிருந்தமை, அதிகளவான வெளிநாட்டுச் சொத்துக்கள் இருந்தமை, ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தன்மை காணப்பட்டமை, நுகர்வுப் பொருட்கள் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்பட்டமை, ஏற்றுமதி வருமானம் மூன்று முக்கிய அதாவது தேயிலை, இறப்பர் தெங்கு போன்றவற்றில் தங்கியிருந்தமை, ஏற்றுமதி வருமானங்கள் கடுமையான தளம்பலுக்குட்பட்டமை, கைத்தொழில்த்துறை முக்கியம் பெறாது இருந்தமை, இறப்புவீத வீழ்ச்சி, சனத்தொகையில் ஏற்பட்ட மிகவிரைவான வளர்ச்சி, பிறப்புவீத அதிகரிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்நிலைமைகளை சுமூகமான நிலைக்கு கொண்டுவர சுதந்திரத்தின்பின் பதவிக்கு வந்த அரசு இலங்கைப் பொருளாதாரத்தை ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் என்ற தன்மைக்குள் வைத்திருந்ததுடன் சுதந்திரத்தின் பின் வந்த ஒவ்வொரு ஆட்சியாளரும் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க பல்வேறு கோட்பாடுகள், திட்டங்கள் என்பவற்றை முன்வைத்தனர். இவற்றை ஆராய நாம் பல்வேறு காலகட்டங்களாக பின்வருமாறு பிரித்து நோக்கலாம்.

இந்த வகையில் 1948 இல் இருந்து 1960 வரை, 1960 இல் இருந்து 1977 வரை, 1977 இல் இருந்து 1994 வரை, 1994 இன் பிற்பகுதி என்ற வகையில் மேலோட்டமாக பாகுபடுத்தமுடியும். எனினும் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாறிமாறி வேறுபட்ட கட்சிகள் பதவியேற்றாலும் பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சியும் தொழிலாளர் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்த வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தான் மாறி மாறி ஆட்சியில் இருந்து வருவதை அவதானிக்கலாம். உதாரணமாக 1947 தேர்தலில் UNPயும், 1952இல் UNPயும், 1956 இல் தொழிலாளர் கட்சிகளுடன் கூட்டுச் சேர்க்கப்பட்ட SLFPயும் 1960 பங்குனியில் UNP யும், 1960 ஆடியில் கூட்டுச்சேர்க்கப்பட்ட SLFPயும் 1965இல் UNPயும், 1970 இல் கூட்டுச் சேர்க்கப்பட்ட SLFPயும், 1977இல் UNP யும், 1982இல் UNPயும், 1988 இல் UNPயும், 1994இல் SLFP (பொதுஜனஐக்கிய முன்னணி) யும் என மாறி மாறி ஆட்சிக்கு வந்திருப்பதை அவதானிக்கலாம்.

இந்த வகையில் 1948 இல் பதவிக்கு வந்த UNP அரசு குடியேற்ற வாதகாலப் பொருளாதாரத்தில் காணப்பட்ட பண்புகள் சிலவற்றைத் தொடர்ந்து பின்பற்றியது. இக்காலப் பகுதியிலேயே (1953களில்) இலங்கையில் உலக வங்கியின் (World Bank) செல்வாக்கு இடம்பெற ஆரம்பித்தது. பொருளாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய விவசாயம், சிறு கைத்தொழில் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. இதனால் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கை, விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் என்பன முன்னேற்றம் கண்டன. சென்மதி நிலுவை (Balance of Payment) ரீதியானது தொடர்ச்சியாக சாதகமாகவே இருந்தது. இக்காலப்பகுதியில் அமுலாக்கப்பட்ட சில

திட்டமிடல் திட்ட அமுலாக்கல் என்பவற்றால் மிதமான பொருளாதார வளர்ச்சி வேகம் ஒன்று காணப்பட்டது. இக்காலப் பகுதியில் ஏற்பட்ட அரைகுறைத் திறந்த பொருளாதாரக் கொள்கை கைத்தொழிலில் அரச துறையும் தனியார் துறையும் ஈடுபட வழிவகுத்தது. ஆயினும் 1950 களின் இறுதியில் தெளிவானதோர் கைத்தொழில் கொள்கையின் ஆரம்பம் ஏற்பட்டது. 1948–1955 காலப்பகுதியில் பல ஆறு ஆண்டுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தபோதும் 1956 இல் பதவிக்கு வந்த SLFP அரசினால் கொண்டு வரப்பட்ட 10 வருடத்திட்டத்தின்கீழ் (1959–1968) கைத்தொழில் துறைக்கு மேலும் முக்கியம் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சுதந்திரத்தின் முன் ஏற்பட்ட சனத்தொகை வளர்ச்சி 1950 களின் பின் வேலையின்மைப் பிரச்சினையை அதிகரித்தது. 1950களில் ஏற்பட்ட 1953-2.8% சனத்தொகை வெடிப்பு (Population Boom) அதிகரித்த சனத்தொகை வளர்ச்சியின் காரணமாக அரசு பெருமளவு நிதியை சமூக நலத்திட்டங்களிற்கே செலவிட வேண்டியிருந்தது. இக்காலப்பகுதியில் (1950களின் பிற்பகுதியில்) அறிமுகப்படுத்தப்பட்ட தேசியமயமாக்கல் என்ற கொள்கையின் கீழ் பெரும்பாலும் தனியார்துறை முயற்சிகள் அரசதுறை வசமாக்கப்பட்டது. மேலும் 1956 இல் இருந்து வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு அரசு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டது. இதனால் அரசு இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உள்ளூர் நுகர்வுப்பொருட்களின் கொள்வனவாற்றலைத் தூண்டும் வகையில் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் என்ற கொள்கையைப் பின்பற்றியது. இக்கொள்கையைச் செயற்படுத்த 1950 களின் இறுதியிலும் 1960 ஆரம்பத்திலும் அரசினால் இறக்குமதிமீது உயர்ந்த தீர்வைகள் (Tariffs) கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் விலைக்கட்டுப்பாடுகள், கைத்தொழில் அனுமதிப்பங்கு, அரசதுறைகள் மத்திய திட்டமிடல் என்பவற்றை மேற்பார்வை செய்தல் என்பன உள்ளடக்கப்பட்டன. இவற்றின் மூலம் உள்நாட்டுக் கைத்தொழிலைப் பாதுகாத்தலையே 1956 1965 வரையான SLFP யினதும் அதன் கூட்டுக்கட்சிகளினதும் நோக்காகக் காணப்பட்டது.

1965இல் இப் பதவிக்கு வந்த UNP அரசு 1970 வரை ஆட்சியிலிருந்தது. இக்காலத்தில் அரசு சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனையுடன் வரையறுக்கப்பட்ட பகுதித் தாராளமயமாக்கல் (Partial Liberalisation) என்ற கொள்கையுடன் இறக்குமதி தாராளமயமாக்கல் (Import Liberasation) பொதுவான நாணயப் பெறுமதிக்குறைப்பு (General develuation) தெரிவு செய்யப்பட்ட நாணயப்பெறுமதிக் குறைப்பு இரட்டை நாணய மாற்றுவீத முறை (Dual Exchange Rate System), அன்னிய செலாவணி உரிமைச் சான்றிதழ் (FEECS) திட்டம் 1968 இல் அறிமுகப்படுத்தப்பட்டமை, பசுமைப் புரட்சியின் (Green Revalution) விளைவாக பயிர்ச் செய்கையின் சில ஊக்குவிப்புக்களைச் செய்தல், நலச் செலவுகளில் சில சீர்திருத்தங்களைச் செய்தல் என்பவற்றையும் உள்ளடக்கியது. இக்காலப் பகுதியில் உலகவங்கியின் உதவியுடன் இலங்கைக்கு உதவி வழங்கும் குழு (Sri Lanka Aid Group) ஒன்று அமைக்கப்பட்டது. மேலும் இக்காலப்பகுதியில் இலங்கை மூலதனப் பற்றாக்குறையினை அனுபவிக்கத்தொடங்கியது. இதனால் வர்த்தகக் கடன்களின் அளவு அதிகரித்து சென்மதி நிலுவை தளம்பலடையத் தொடங்கியது. இந் சூழ்நிலை 70இல் ஆட்சிமாறத் துணை புரிந்த காரணங்களில் ஒன்றாகும்.

1970இல் பதவிக்கு வந்த புதிய அரசானது (SLFP) ஒரு இறுக்கமான மூடப்பட்ட பொருளாதாரக்கொள்கை ஒன்றினையே பின்பற்றியது. 1972 இல் மாற்றத்தகு ரூபாக்கணக்குத் திட்டமொன்றை நாணயச் சீர்திருத்தத்தைக் கருத்திற்கொண்டு அரசு அறிமுகம் செய்தது. இவர்கள் தொடர்ந்து இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை (Import Substitution Industrialisation (ISI) யினை பின்பற்றினர். அத்துடன் சமூக நலச் செலவீடுகளில் முக்கிய கவனம் எடுக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான இறக்குமதிக்கட்டுப்பாடும் வெளிக்காரணிகளின் தாக்கம் மற்றும் பல நெருக்கடிகளும் 1977 இல் புதிய அரசானது பதவிக்கு வரக் காரணமாகியது எனினும் இக்காலப் பகுதியிலுள்ளேயே (1970–77) பெருமளவான நில சீர்திருத்தங்கள் (Land Reforms) அதாவது நிலம் குவிந்து கிடந்த ஒரு சில குழுக்களிடமிருந்து காணிகள் அரசுடைமையாக்கப்பட்டு நிலமற்றவர்கள், வறியவிவசாயிகள் என்போருக்கு 1972 ஆம் ஆண்டு, 1975 ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் மூலம் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. கிராமியத் துறையின் முதலீட்டை ஊக்குவிக்க கிராமிய அபிவிருத்தி வங்கி என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை ஊக்குவிக்க செயற்றிட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. 1970 இல் ஏற்பட்ட கொள்கைமாற்றம் 1974 இல் சுதந்திர வர்த்தக வலயம் (Free Trade Zone (FTZ) உருவாக வழிகோலியது. எனினும் 1977 இல்பதவிக்கு வந்த UNP அரசு IS2 அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் (Export-Oriented Industrialisation (EOI) என்ற கொள்கையை முன்வைத்தது. இது ஏற்றுமதிப் பொருளாதாரமாக (EE) (Export Economy) இலங்கை மாறுவதற்கு

வழிகோலியது. 1970இல் முக்கியம் பெற்ற ISI கொள்கை புதிய கைத்தொழில் மயமாக்கல் நாடுகளினை (NICS நாடுகளை) (Newly Industrialising Countries) அடிப்படையாகக்கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டிருப் பினும் இலங்கை இவ் அந்தஸ்தினை எட்டமுடியா மைக்குக் காரணம் இரண்டாம் உலக யுத்தக் காலத்தில் ஆரம்பித்த ISI கொள்கை ஆனது, சுதந்திரத்தின் பின் மீண்டும் 10 அல்லது 12 வருடங்களின் பின் அறிமு கப்படுத் தப்பட்டமையும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் (EE)இல் இருந்து (ESI) க்கும் பின் (ESI இல் இருந்து (EOI) க்கும் செல்ல காலதாமதம் அடைந்தமையாகும். 1980 களில் தான் EOI முக்கியம் பெறத்தொடங்கியது. இது NICS நாடுகளுடன் ஒப்பிடும்போது பிந்திக் காலடி வைத்தமையால் எதிர்பார்த்த வெற்றியினை எட்ட முடியாது உள்ளமை குறிப்பிடத்தக்கது.

1977 இல் வந்த புதிய UNP அரசு எடுத்த முயற்சி முழுமையான ஒரு தாராள திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு வழிகாட்டியது. இதனால் இக்காலத்தில் பொருளாதார வளர்ச்சி 5% ஐ எட்டியிருந்தது. அத்துடன் வேலையின்மையின் அளவில் ஓரளவு வீழ்ச்சி காணப்பட்டது. 77இன் பின் மேற்கொள்ளப்பட்ட புதிய கொள்கைகளில் மாற்றுவீதம் ஒருமுகப்படுத்தப்பட்ட தோடு மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று முறை நடை முறைப்படுத்தப்பட்டது. அத்துடன் பயனுறுதி வாய்ந்த மதிப்பிறக்கமும் மேற்கொள்ளப்பட்டது, உதாரணமாக 1977 இல் ஒருமுகப்படுத்தப்பட்ட மிதக்கவிடல், இறக்குமதிக் கட்டுப்பாடு, வரிவிதங்கள் கணிசமான அளவுக்கு மீளஅமைக்கும் நோக்கில் இறக்குமதித் தீர்வைகள் மீள மாற்றியமைக்கப்பட்டமை, முற்கனவே காணப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மீதான விலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதோடு அரச தொழில் முயற்சி களுக்கு இருந்து வந்த சுதந்திரமான மேலாதிக்க செயற்பாடுகள் குறைக்கப்பட்டமை, பலவகை இறக்கு மதிகளிலிருந்த அரசிற்கான பிரத்தியேக உரிமையும், தனியுரிமையும் அனுமதியின் தேவை என்பன முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை, சந்தைத் தாக்கங்களுக்குகேற்ப முன்னர் காணப்பட்ட மானிய விலைகளிலான பொருட் கள் சேவைகளின் விலைகளை இருந்தபடியே அனுமதிக் கப்பட்டு அதேநேரம் தாழ்வருமான வகுப்பினருக்கு நன்மையளிக்கும் நோக்கில் உணவு மானியத்திற்குப் பதிலாக உணவு முத்திரை 1979 ல் அறிமுகப்படுத் தப்பட்டது. நெல்போன்ற விவசாயப் பொருட்களுக்கு உத்தரவாத விலைத்திட்டத்தினைத்தொடர்ந்துபேணல், கடன் மீளளிப்பு சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டமை, மற்றும் இக்காலப் பகுதியில் தாராள திறந்த பொருளா தாரக் கொள்கையுடன் மக்கள் மயமாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே வெளிநாட்டு வங்கிகள் அதிகளவில் ஆரம்பிப்பதற்கு இடமளிக்கப்பட்டதுடன் அன்னிய முதலீட்டைக் கவர வரித்தீர்வைச் சலுகைகள் ஏற்படுத்தப்பட்டது. சரு கூலச் செலவீடுகளை குறைந்த மட்டத்தில் பேணும் வழிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் சுதந்திர வர்த்தக வலயங்களும், கீழ் கட்டுமான வசதிகளை ஊக்குவிப்பதற்காக கைத்தொழில் பூங்காக்களும் அமைக்கப்பட்டது.

இவ் வகையில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் என்ற வகையில்

| ஆண்டு | மாதம் | இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| 1978 | மார்ச் | கட்டுநாயக்க | வர்த்தக சேவை |
| 1983 | நவம்பர் | பியகம | வர்த்தகசேவை |
| 1991 | யூன் | கொக்கலை | வர்த்தக சேவை |
| 1993 | யூன் | மிகிந்தலை | கட்டுமான சேவை |
| 1994 | ஏப்ரல் | பல்லேகலை | கட்டுமான சேவை |

உருவாக்கப்பட்டதோடு 1997இல் மீரிகமவில் உள்ள மனைபாய என்ற இடத்தில் புதிய ஏற்றுமதி பதனிடல் நிலையமும் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இக்காலப்பகுதியில் துரித மகாவலித்திட்டம் கொண்டுவரப்பட்டது. கிராமிய மூலதனத்தை ஊக்குவித்து கிராமிய இளைஞர்களை சுயதொழிலில் ஈடுபடுத்துவதற்காக ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டம் கொண்டுவரப்பட்டது. நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் பெரும்பாலா னவை தனியார்மயமாக்கப்பட்டது. இவ்வாறு அரசினால் எடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளினால் 1977 லிருந்து 1982வரை 6.24% வளர்ச்சியைக் கண்ட இலங்கை பின்வந்த (1983 களில் இருந்து) தென்னி லங்கை இனக்கலவரங்களினாலும் (1983) உள்நாட்டில் ஏற்பட்ட வடக்கு கிழக்கு யுத்த நிலைமைகளினாலும் தொடர்ச்சியாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள், வறட்சி என்பனவற்றினாலும் 1987, 88, 89 களில் ஏற்பட்ட இந்திய தலையீடும், ஜனதா விமுக்தி பெரமுன (Janatha Vimukthi Peramuna (JVP) ஐச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களினாலும் 4.99% ஆகிய குறைவான வளர்ச்சியையே கண்டது. இது மேலும் 87 தொடக்கம் 90 வரையுள்ள காலப்பகுதியில் 3.14% ஆகக் குறைந்து காணப்பட்டது. 1980இல் மேற்கொள்ளப்பட்ட 88இல் பதவிக்கு வந்த புதிய UNP அரசின் தீவிர நடவடிக் கையால் 1989களில் JVP கிளர்ச்சியாளர்களின் செயற் பாடு கட்டுப்படுத்தப்பட்டதுடன் இக்காலப்பகுதியிலேயே

எல்லா மக்களுக்கும் பயன்கிடைக்கக்கூடியதான ஒரு இலக்கு நோக்கிய ஜனசவிய வறுமை ஒழிப்புத்திட்டம் (Poverty alleviation) புதிய UNP அரசினால் கொண்டு வரப்பட்டது. அரச நிறுவனங்கள் பெரும்பாலானவை தொடர்ந்து தனியார் மயமாக்கல்,மக்கள் மயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டது. அதாவது அதிக அரச நிறுவனங்களில் முகாமைத்துவம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 2000இல் சகலருக்கும் வீடு என்ற கொள்கை முன்வைக்கப்பட்டது. உதாரணமாக 10,100,1000 1இலட்சம் வீட்டுத்திட்டம் என்று இருந்த இத்திட்டம் இக்காலப் பகுதியில் 10 இலட்சம் வீட்டுத் திட்டமாக மாறியது. அத்துடன் பாடசாலை, மாணவருக்கு மதிய உணவு, சீருடை என்பன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகள் காணப்பட்டாலும் பெருமளவில் (1989-1994) மனித உரிமை மீறல்களும்இதே காலப்பகுதியில் கூடுதலாகக் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

1993 மே தினத்தன்று ஏற்பட்ட ஜனாதிபதியின் திடீர் மறைவு ஒரு புதிய ஜனாதிபதியை குறுகிய காலத்திற்கு தோற்றுவித்தது. ஆனால் இக்காலப் பகுதியில் பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி பெரிய மாற்றங்களை ஏற்படுத்தாது இருந்தமையால் பொருளாதாரத்தில் பெரியமாற்றங்கள் குறிப்பிடக்கூடியளவிற்கு எழவில்லை. பின் 1994இல் 11ஆவது பாராளுமன்றத் தேர்தலின்படி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று பதவியேற்ற பொதுசனஐக்கிய முன்னணி அரசு முன்னைய அரசு செய்த அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றைத் தொடர்ந்து கடைப்பிடிப்பினும் சில புதிய திட்டங்களையும் அமுல் நடத்தியது. அமுல் நடத்தி வருகின்றது. அதாவது 1977இல்ஏற்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையையே இதுவும் கடைப்பிடித்து வருகின்றது. எனினும் உள்நாட்டில் தீவிரமடைந்துவரும் இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்டு வருகின்ற தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆனது வெளிநாட்டு தனியார் முதலீடுகளையும் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈடுபாட்டையும் குறைத்துள்ளது. பிரேமதாசாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனசவிய வறுமை ஒழிப்புத் திட்டத்திற்குப் பதிலாக இக்காலப் பகுதியில் பொதுஜனஐக்கிய முன்னணி அரசு சமுர்த்தித் திட்டம் என்ற வறுமை ஒழிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மேலும் 1995இல் ஏற்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் முறிவினைத்தொடர்ந்து யுத்தம் 1995இன் நடுப்பகுதியில் இருந்து மேலும் தீவிரமடைந்ததுடன் அதன் தொடர்ச்சியாக வடபகுதியில் பிரதேச ரீதியாக ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வு, 96இல் ஏற்பட்ட மத்திய வங்கிக் குண்டுவெடிப்பு, கலதாரி ஹோட்டல் தலதாமாளிகை, மருதானைக் குண்டுவெடிப்பு நிகழ்வுகள் ஆனது பொருளாதாரத்தில் முதலீட்டாளர்களின் அச்ச உணர்வையும் நிச்சயமற்ற தன்மையையும் மேலும் தீவிரப்படுத்தியது இது பொருளாதாரத்தை பல வழிகளில் பாதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில் தீவிரமடைந்துவரும் இனப்பிரச்சனையின் தாக்கமானது வட பகுதியில் மட்டுமன்றி தென்பகுதியிலும் பரவத்தொடங்கியதன் விளைவால் வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்கள், மற்றும் சுற்றுலாத்துறையினர் போன்றோரை மேலும் அச்சத்திற்குட்படுத்தி வருகின்றமையால் அவர்களின் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து குறைந்தே வருகின்றது. இது பொருளாதாரத்தைப் பல வழிகளில் பாதித்து வருகின்றது. உதாரணமாக ஏற்கனவே கிடைத்த மறைமுக வேலை வாய்ப்புக்கள் கூடக் குறைந்தே வருகின்றது. அத்துடன் அரசு பெருமளவு நிதியினை யுத்தச் செலவுகள், புனருத்தாரணச் செலவுகள் என வரிசைப்படுத்தி ஒதுக்கி வருவதனால் பொருளாதாரத்தின் அபிவிருத்தி சார் நடவடிக்கைகள் மேலும் பின்தள்ளப்பட்டு செல்கின்ற அதே நேரம் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பற்றாக் குறையில் ஏற்பட்டு வருகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு மற்றும் வரவு செலவுத் திட்டத்தின் தொடர்ச்சியான பற்றாக்குறை என்பன ஒரு புறம் தாக்கம் செலுத்தி வர மறுபுறம் அரசானது உட்கட்டமைப்பு வசதிகளை ஊக்குவிக்க மேலும் பல முயற்சிகளை எடுத்தவண்ணமே உள்ளது. குறிப்பாகத் தனியார் துறைக்கு ஊக்குவிப்பு வழங்கல், உதாரணமாக மல்வத்தவில் 1996 இல் கைத்தொழிற் பூங்காவை உருவாக்கி 2100 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏற்றுமதியை மேம்படுத்தல் உதாரணமாக இறக்குமதித்தீர்வைகள் குறைக்கப்படல், மறைமுக வரிகளைக் குறைத்தல், மூலப் பொருட்கள் மீது சுங்க நடவடிக்கைகளை இலகுபடுத்தல், ஏற்றுமதிப்பொருட்களை கப்பற்படுத்துவதனைத் துரிதப்படுத்துவதற்காக முக்கியமற்ற ஒழுங்கு விதிகளை அகற்றுதல், நீண்டகால நிதி பெறக்கூடிய வழிவகைகளை அதிகரித்தல், நிதிச் சந்தைகள் பங்குச் சந்தைகளில் அரசின் ஊக்கத்தினை அதிகரித்தல், கொள்கை நிறைவேற்றலை நெகிழ்ச்சித் தன்மையுடையதாக வைத்திருத்தல், போன்ற பல செயற்பாடுகளை செயற்படுத்துவதையே 1977 ற்குப் பிற்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்து வந்த UNP அரசினதும் தற்போது ஆட்சி புரிகின்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினதும் நோக்கங்களாக காணப்பட்டது. காணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக 1977 இன் பின் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் கொள்கை (EOI) (Export - Oriented Industrialisation Policy) ஏற்றுமதிக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை (Export-Led Industrialisation Development Policy) மற்றும் இதனை ஊக்குவிக்க வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனை சபை (FIAC) (Foreign Investment Advisory Committee) மற்றும் உள்நாட்டு முதலீட்டு ஆலோசனை சபை (LIAC) (Local Investment Advisory Committee) என்பவை உருவாக்கப்பட்டமை, ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் அல்லது சுதந்திர வர்த்தக வலயம் (Export Processing Zone or Free Trade Zone (EPZ or FTZ) என்பவற்றையும் உருவாக்கி வெளிநாட்டு முதலீடுகளைக் கவர பல முயற்சிகள் எடுத்து வருகின்றது. அத்துடன் ஏற்றுமதி மேம்பட்டுக் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி தொடர்பாக வரிச் சலுகைகள், வழங்குவதோடு ஏனைய ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் ஏற்றுமதி மேம்பாட்டு வலயத்தில் முதலீட்டு சபை (BOI) *Board of Investment) தாபிக்கப்பட்டு அதன் அனுமதியுடன் FTZ இன் செயற்பாடும் அமைகின்றது.

தற்போதைய அரசு ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் வெளிநாட்டு முதலீட்டைக் கவரவும், ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலைக் கூடிய அக்கறையுடன் மேற்கொண்டு வருகின்றது. இதனை 1995ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட உரையில் இடம்பெற்ற "Export-Orientation - Our growth must be export Oriented so that our production will not be constrained by a limited domestic market...................................... export pust strategy of our government" என்ற கருத்து புலப்படுத்துகின்றது.

மேலும் Boo என்ற கட்டுதல் இயக்குதல் அத்துடன் உரிமை கொள்ளல் (Build operate and own) மற்றும் Bot என்ற கட்டுதல் இயக்குதல் அத்துடன் கைமாற்றுதல் (Build Operate and Transfer) என்ற புதிய உலகப்புகழ் பெற்ற மேற்படி Boo, Bot ஆகிய தனியார் முதலீட்டு தந்திரோபாயத்தினை (Private Investment strategy) யும் தற்போதைய அரசு அறிமுகப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக சுதந்திரம் பெற்ற காலம் தொட்டு கடந்த 50 வருடங்களாக பல ஆட்சியாளர்கள் வெவ்வேறு காலப் பகுதியில் மாறி மாறி ஆட்சிபுரிந்து வருகின்ற காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரக் கொள்கை மாற்றங்களானது பொருளாதாரத்தின் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனைக் கடந்த 50 வருட காலப் பகுதியில் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் தொழில் வாய்ப்பில், ஏற்றுமதியில் அன்னியச் செலவாணிச் சம்பாத்தியத்தில், இறக்குமதியில் மற்றும் பொருளாதார, சமூக நலக் குறிகாட்டிகளில் ஏற்பட்ட மாற்றத்தினை இனங்காணுவதனூடாக மேலோட்டமாக நோக்குவோமாயின்.

ஆகவே கடந்த 50 வருடகாலத்தில் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தினை மிகவும் சுருக்கமாக நோக்கின்

1. உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைகள் துறை என்பன 1950 இல் முறையே 49.8%, 11.2%, 39% ஆகக் காணப்பட்டு 1994 இல் முறையே 20.8%, 29.6%, 49.6% ஆக மாற்றங்கண்டுள்ளது.

2. மொத்த தொழில் வாய்ப்பில் விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைகள் துறை, என்பன 1953 இல் முறையே 52.9%, 10.2%, 36.9% ஆகப் பங்களித்த நிலையானது 1994இல் முறையே 39.9%, 16.2%, 43.9% ஆக மாற்றங்கண்டுள்ளது.

3. மொத்த ஏற்றுமதிக் கட்டமைப்பில் பெருந்தோட்ட உற்பத்திகள், சிறு வேளாண்மை உற்பத்திகள், தயாரிப்புத் துறை உற்பத்திகள், இரத்தினக் கற்கள், ஏனைய உற்பத்திகள் என்பன 1975 இல் முறையே 75.6%, 2.9%, 6.1%, 4.6%, 10.6% ஆக இருந்து 1994 இல் முறையே 17.0%, 4.0%, 7.9%, 2.5%, 4.5% ஆக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஏற்றுமதிகளை மரபு ரீதியான ஏற்றுமதி, மரபு ரீதியற்ற ஏற்றுமதி என நோக்குகின்ற போது முறையே 1975 இல் 78.67%, 21.4% ஆக காணப்பட்டு 1994 இல் முறையே 17.9%, 82.1% ஆக மாறியுள்ள போதும் தேசிய சம்பாத்தியத்தில் இன்னும் மரபு ரீதியான ஏற்றுமதிகளே முக்கியம் பெறுகின்றது.

4. மொத்த இறக்குமதிக் கட்டமைப்பில் நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள், ஏனைய பகுக்கப்படாதவை என்பன 1960 இல் முறையே 51.0%, 30.3%, 18.1%, 0.7% ஆக இருந்த நிலை 1994 இல் முறையே 19.5%, 50.8%, 28.6%, 1.1% ஆக மாற்றங் கண்டுள்ள போதும் இறக்குமதியாகும் இடை நிலைய பொருட்களில் பெருமளவு தயாரிப்புத் துறைக்கான துணிகள் மற்றும் நுகர்வுக்காக பயன்படுத்தும் கோதுமைத் தானியம் மற்றும் பெற்றோலிய உற்பத்தி தொடர்பான மசகு எண்ணெய் என்பன அதிக பங்கு

வகிப்பது பொருளாதார அபிவிருத்திக்கு நல்ல தல்ல.

மேலும் உற்பத்தியில், தொழில் வாய்ப்பில் மொத்த ரீதியில் இன்று விவசாயத்துறையினை விட கைத்தொழில் துறை முன்னனி வகித்தாலும் தேறிய ரீதியில் ஊட்டிய பெறுமதி அடிப்படையில் இன்றும் விவசாயத்துறையே முக்கியம் பெறுவது புலனாகின்றது. உண்மையில் இத்தகைய சூழ் நிலை பொருளாதார அபிவிருத்திக்கு நல்ல தல்ல. இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது கடந்த 20 வருடங்களில் சராசரியாக 4.1% ஆக உள்ளது ஆனால் சமூக நலக்குறிகாட்டிகளை நோக்கின் ஆயுட்காலம் (1945-42.5 வரு, 96-72 வரு), சிசுமரண வீதம் (1946-140 பேர், 1996-16 பேர்), பிறப்பு வீதம் (1946-35.9%, 1996-19.8%) இறப்பு வீதம் (1946-21.5%, 1996-5.8%) சனத்தொகை வளர்ச்சி வீதம் (1953-2.8%, 1996-1.1%), எழுத்தறிவு வீதம் 50களில் 60% 96ல் 98.3%), கினிக்குணகம் (1953-0.5, 73-0.41, 81/82 - 0.52, 85/86 - 0.58 90/91 - 0.47) என்பன சுதந்திர காலத்தினை விட தற்போது முன்னேற்ற நிலையில் உள்ளதோடு தென் ஆசிய நாடுகளுக்குள்ளேயே முன்னுதாரணமாக எடுத்துக் கூறக்கூடிய அளவுக்கு நல்ல நிலையில் இருக்க முக்கிய காரணம் ஆக சுதந்திரத்தின் பின் பதவிக்கு வந்து கொண்டிருக்கும் சகல ஆட்சியாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகரித்த சமூக நலச்செலவீடுகளே காரணம் என கூறப்படுகின்ற அதே நேரம் சுதந்திர காலத்தில் இருந்து இற்றைவரை மேற்கொண்ட சமூக நலச் செலவீட்டுகாக ஒதுக்கிய பணத்தினை பொருளாதார அபிவிருத்தி கருதிய முதலீடுகளில் முதலிட்டு இருப்பின் இலங்கைப் பொருளாதாரம் பொருளாதார ரீதியில் அபிவிருத்திகண்டு இருக்கும் என வாதிடுபவர்கள் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது. எப்படி இருப்பினும் சமூக நலன்கருதிய அரசுகளின் அதிகரித்த சமூக நலச் செலவீடுகளின் விளைவாக சுதந்திர கால இலங் கையை விட 50 வருடங்களின் பின்னரான இன்றைய இலங்கைப் பொருளாதாரமானது சமூக நலக்குறி காட்டிகளின் முன்னணியில் இருக்கின்றபோதும் பொருளாதார ரீதியில் பின் தங்கி (தலாவருமானம் குறைவாக அதாவது 1997 இல் 814 அமெரிக்க டொலராக) இருப்பது இலங்கையின் அபிவிருத்திக்கு பெரும் சவாலாகவே உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தொகுத்து நோக்குகின்ற போது இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து சுமார் 50 வருடங்களாக ஆட்சியாளர்கள் மாறிமாறி ஆட்சிக்கு வந்தபோதும் கொள்கை மாற்றங்கள் கடைப்பிடிக்கப்பட்ட போதும் இன்று வரை இலங்கைப் பொருளாதாரம் அபிவிருத்தி அடையாது குறைவிருத்தி நிலையிலேயே காணப்படு கின்றது. இத்தகைய நிலை தொடர்ந்து காணப்பட பல காரணங்கள் பொறுப்பாக உள்ளன. இந்த வகையில் தேர்தலுக்கு முன் தேர்லில் வெற்றி பெறும் நோக்கில் பல வாக்குறுதிகளை முன்வைப்பதும், பின் பதவிக்கு வந்த பின் கொள்கைகளை செயற்படுத்துவதுவதில் திறைமையின்மை காணப்படுவதும், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து நல்ல எதிர்கால அபிவிருத்திக் கேற்ற ஆற்றல், உள்ள வலுமிக்க கொள்கைகளை பின்பற்றாது தொடர்ச்சித் தன்மையற்ற திட்டங்களை மேற்கொள்வதும் அக்காரணங்களில் சிலவாகும். மேலும் சமூக நலன் கருதிய அரசாக இருப்பதால் தொடர்ந்துசமூக நலன் செலவுகளை அதிகரித்து வருவதால் சமூக ரீதியில் அந்தஸ்தினை வாழ்க்கைத்தரத்தினை உ ம் PQLT,HDI என்பவற்றை உயர்த்தி வருகின்ற அதே நேரம், அபிவிருத்தி தொடர்பான முதலீட்டுக்கான வாய்ப்பினை இத்தகைய அதிகரித்து வரும் சமூக நலச் செலவீடானது குறைத்து வருவதாக வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் முதலீடு குறைவாக இருப்பதால் நாடு தொடர்ந்து குறைவிருத்தி நிலேயே இருந்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் இன்று நாட்டின் தேசிய உற்பத்தியில், ஏற்றுமதியில், அன்னியச் செலவாணிச் சம்பாத்தியத்தில், மற்றும் தொழில் வாய்ப்பில் கூட தயாரிப்புத் துறை முக்கிய பங்கினை வகிப்பதனையே வெளிப்படையாகப் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்ற போதும், ஆழமாக நோக்குகின்றபோது அதாவது ஊட்டிய பெறுமதி அடிப்படையில் பார்க்கின்ற போது இன்றும் கூட இலங்கைப் பொருளாதாரம் விவசாயத்துறையில் பெரிதளவு தங்கியிருப்பதும், ஊட்டிய மதிப்பின்படி தேயிலை இறப்பர் தெங்கு மூலமாகவே அதிக வருமானத்தைத் திரட்டிக்கொள் வதும் புலனாகிறது. அத்துடன் இறக்குமதியில் கூட பெருமளவு பங்கினை இடைநிலைப்பொருட்கள் வகித்தாலும் அவை தயாரிப்புத் துறையில் முக்கியம் பெறுகின்றது ஆனால் ஊட்டிய மதிப்பினைக் குறைவாகக் கொண்ட தைத்த ஆடைகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான உள்ளீடுகளாக அதிகளவில் இருப்பதும் நல்லதல்ல. இதனால் வர்த்தகத்தில் தங்கியிருக்கின்ற பொருளாதா ரமாக இலங்கை தொடர்ந்து இருப்பதும் அபிவிருத் திக்கு ஏற்ற சூழலை உருவாக்கத்தடையாகவே இருந்துவருகின்றது.

எனவே இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியானது அரசியலில் உறுதி நிலை, நாட்டில் அமைதியான சூழல், ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் இணைந்து எதிர்கால அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தும் தன்மை, மேற்கொள்ளப்படும் திட்டங்களில் தொடர்ச்சித் தன்மையினைப் பேணல், உள்நாட்டில் உள்ள வளங்களைப் பயன்படுத்தக்கூடிய வகையில் திட்டங்களை ஒழுங்கமைக்கும் தன்மை போன்ற பல அபிவிருத்திக்கான சூழ்நிலைகளை உருவாக்குவதில் ஏற்படுகின்ற வெற்றியில் தான் தங்கியுள்ளது எனின் மறுப்பதற்கில்லை.

Reference


1. Dilimmas of Development
   Fifty years of Economic change in Sri Lanka
   Sri Lanka Association of Economists - Colombo-1997
   Edited by W.D. Lakshman

2. The Sri Lanka Journal of South Asian Studies
   No. 2 (New Series) 87/88
   University of Jaffna
   "Government Economic Policies in the Sri Lanka
   National Question".
   Dr. V. Nithiyananadan. Page 150-171

3. பொருளியல் நோக்கு 1979 Jan/Feb
   1984 Jan/Mar
   1988 Feb/May
   1994 Feb
   1996 Nov/Dec
   1997 July/ August

4. Economic & Social statistics of Sri Lanka Statistics Department, Central Bank of Sri Lanka Colombo, Sri Lanka. 1996

5. மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்


**Hard work is the best investment a man Can make"**

***- C.M. Schwab***

**"I never knew more sweet and happy hours then I employed open my books"**

***- James shirley***

**Spoon feeding in the long run teaches us nothing but a shape of the spoon**

***- E.M.Forster***